## தமிழ்நாடு அணியா! டெல்லி அணியா? தமிழ்நாட்டைக் காக்க

# தி.மு.க. தலைமையிலான கூட்டணியை வெற்றி பெறச் செய்வீர்!

## கோவையில் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... 3–ஆம் பக்கத் தொடர்ச்சி!

கோவை, மதுரைக்கான மெட்ரோ ரயில் திட்டங்களைக் கூட நிராகரித்திருக்கும் அரசு தான், இன்றைய ஒன்றிய பாஜக அரசு! 20 இலட்சம் மக்கள் தொகை இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பை வைத்து, அப்படி சொல்கிறார்கள். இப்போது நடப்பது 2026. மக்கள் தொகை இப்போது வெகுவாக கூடி இருக்கும். இன்னும் சொன்னால், இந்தத் திட்டத்திற்குப் பணம் ஒதுக்கி, அதை நிறைவேற்றி முடிக்கும்போது 2035-ஆம் ஆண்டே ஆகியிருக்கும். அப்போது கோவை, மதுரையின் மக்கள் தொகை இவர்கள் சொல்லும் 20 இலட்சத்தை எல்லாம் தாண்டி இருக்கும். இதெல்லாம் அவர்களுக்குத் தெரியாது என்று நினைக்காதீர்கள். நன்றாகத் தெரியும்! தெரிந்தேதான் கோவைக்கும், மதுரைக்கும் மெட்ரோ ரயில் திட்டம் கிடையாது என்று பா.ஜ.க. மறுக்கிறது. ஆளே இல்லாத கடையில் 'டீ' ஆற்றுவது மாதிரி ஆக்ராவில் மெட்ரோ விட்டிருக்கிறது பா.ஜ.க.! ஆக்ரா மக்கள் தொகை 16 இலட்சம்தான். ஆனால், அங்கு மெட்ரோவுக்கு அனுமதிக்கிறார்கள். இதேபோன்றுதான் பாட்னா, போபால் ஆகிய நகரங்களிலும் அனுமதி தந்திருக்கிறார்கள். ஆனால், கோவைக்கும், மதுரைக்கும் மறுக்க வேண்டிய அவசியம் என்ன? காரணம் என்ன? இந்த இரண்டு நகரமும் தமிழ்நாட்டில் இருக்கிற காரணத்தினால்தான்!

தமிழ்நாட்டைப் பார்த்தால் பா.ஜ.க.வுக்கு எப்படி தெரிகிறது? பா.ஜ.க.வுக்கு வாக்களிக்காதது என்ன பாவச் செயலா? கோவையைக் கைப்பற்ற வேண்டும் என்று பா.ஜ.க. துடிக்கிறதே! கோவை மக்களுக்கு இப்படி அநீதி இழைத்துவிட்டு, எந்த முகத்தோடு நீங்கள் கோவைக்கு வருகிறீர்கள்?

தேர்தல் நேரத்தில் மட்டும் இவர்களுக்குத் தமிழ்நாடு நினைவிற்கு வரும். ஒன்றிய பட்ஜெட் தயாரிக்கும்போது தமிழ்நாட்டை மொத்தமாக மறந்துவிடுவார்கள். இயற்கைப் பேரிடருக்கு நிவாரண நிதி தரும்போது தமிழ்நாடு நினைவிற்கு வராது. இப்படியெல்லாம் நீங்கள் தமிழ்நாட்டைப் பழிவாங்கும் காரணத்தினால்தான் எங்கள் மக்களுக்கும் வாக்குச் சாவடிக்குச் போகும்போது, பா.ஜ.க. நினைவிற்கு வராது. இனியும் வரக் கூடாது! நீங்கள் என்னதான் திட்டம்போட்டு எங்கள் வளர்ச்சியைத் தடுத்தாலும், என் மக்களுக்கான திட்டங்களை இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் கொடுத்துக் கொண்டே இருப்பேன் என்று நம்முடைய திராவிட மாடல் சாதனைகளை படைத்துக் கொண்டிருக்கிறது!

**திராவிட மாடல் அரசின்**
**செயல் திட்டங்கள் இதோ!**

இவற்றின் தொடர்ச்சியாக, அடுத்த 5 ஆண்டுகளில், திராவிட மாடல் 2.0 ஆட்சியில் என்னென்ன செய்யப் போகிறோம் என்று தேர்தல் அறிக்கை வெளியிட்டிருக்கிறோம். இந்தத் தேர்தலின் சூப்பர் ஸ்டார் தி.மு.க. தேர்தல் அறிக்கைதான்! அந்த அறிவிப்புகளை நீங்கள் எல்லாம் பாத்தீர்களா? 2030-ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை மொத்தமாக எப்படி மாற்றியமைக்கப் போகிறோம் என்பதற்கான, தெளிவான செயல்திட்ட அறிக்கையாக தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை அமைந்திருக்கிறது. நாம் கவர் பண்ணாத செக்டாரே இல்லை! ஹைலைட்டாகப் பெரும் வரவேற்பை பெற்றிருக்கும் சில வாக்குறுதிகளை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்தியாவிற்கே மாடலாக இருக்கும் மகளிர் உரிமைத்தொகை இனி மாதம் ஆயிரம் ரூபாய் இல்லை, மாதம் 2 ஆயிரம் ரூபாய்! எல்லோருக்கும் மகிழ்ச்சிதானே? அதற்கான டிரெயிலர்தான் கோடைக்கால சிறப்பு நிதி சேர்த்து, அண்மையில் கொடுத்த 5 ஆயிரம் ரூபாய்!

அதேபோன்று, புதுமைப்பெண், தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் கல்லூரிக்குச் செல்லும் மாணவர்களுக்கு இப்போது மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கி வருகிறோம். இனி அதை ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப் போகிறோம்.

அதேபோன்று, காலை உணவுத் திட்டத்தை 8-ஆம் வகுப்பு வரை விரிவுபடுத்தப் போகிறோம்! ஏற்கெனவே 19 லட்சம் குழந்தைகள் சாப்பிடுகிறார்கள். இன்னும் கூடுதலாக, 15 இலட்சம் மாணவர்களுக்கு சூடான சுவையான உணவு பள்ளிக்கூடத்திலேயே கிடைக்கப் போகிறது.

எல்லாவற்றிற்கும் மேல், இல்லத்தரசிகள் ஒவ்வொருவரும் மகிழ்ச்சி அடைவது போன்று ஒரு அல்டிமேட் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறோம். அது என்ன? எட்டாயிரம் ரூபாய் கூப்பன்! எதற்கான கூப்பன்? இல்லத்தரசிகளான நீங்கள் உங்களுக்குத் தேவையான வீட்டு உபயோக பொருளை, உங்கள் ஊரில், உங்களுக்கு விருப்பமான கடையில், உங்களுக்கு பிடித்த மாதிரி வாங்கிக் கொள்வதற்கான கூப்பன்! புது பொருளா? பழைய பொருளை கொடுத்துவிட்டு எக்ஸ்சேஞ்சா? எல்லாமே உங்கள் சாய்ஸ்தான்! ஒரு புடவை கடைக்குச் சென்றால், கலர் நன்றாக இருக்கிறதா? இந்த கலர் நமக்கு செட் ஆகுமா? இது சாயம் போகுமா? இதன் கலர் மங்கிடுமா? இதெல்லாம் பார்ப்பீர்கள். ஏன், கடைக்காரர் போட்டு வைத்திருக்கும் மெர்குரி லைட் முன் பார்த்து, தொட்டுப் பார்த்து, தடவிப் பார்த்து, இது சில்க்-ஆ? நைலக்சா? என்று கேள்வியெல்லாம் கேட்டு வாங்குவீர்கள். இதெல்லாம் எப்படி உனக்கு அனுபவம் என்று கேட்டுவிடாதீர்கள்! இயல்பைச் சொல்கிறேன்.

**இல்லத்தரசி திட்டம்**
**பழனிசாமியை புலம்ப வைக்கிறது!**

எனவே, அவ்வாறு ஒரு புடவை வாங்குவது போன்று இது உங்கள் சாய்ஸ்தான். வாஷிங் மெஷின், ஃபிரிட்ஜ், டி.வி., கிரைண்டர், மிக்சி, மைக்ரோ-வேவ் அவன், மின் அடுப்பு போன்ற எந்தப் பொருளையும் நீங்கள் வாங்கிக் கொள்ளலாம். இன்றைக்குத் தமிழ்நாடு முழுவதும் இந்தத் திட்டத்தைப் பற்றிதான் அனைவரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நாம் ஏற்கெனவே செயல்படுத்தி வரும் திட்டங்களுக்குப் பெயரை மட்டும் மாற்றி, இன்றைக்கு அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையை வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்கள் கூட, "இன்னும் சில நாள் பொறுத்திருந்து பார்த்து அறிவித்திருக்கலாமே" என்று இப்போது புலம்பிக் கொண்டிருப்பார். அந்த அளவிற்கு நம்முடைய 'இல்லத்தரசி' திட்டம் அனைத்து இல்லத்திற்கும் சென்று சேர்ந்திருக்கிறது.

## ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை மொத்தமாகப் புறக்கணித்தனர்!

அதேபோன்று, உலகிற்கே உணவு அளிக்கும் உழவர்களை மகிழ்விக்க ஒரு மாபெரும் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறோம். இலவச மின்சாரம் பெறும் 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு, எந்த வித மீட்டரும் பொருத்தப்படாத நவீன மின்சாரப் பம்பு செட்டுகள் வழங்கப்படும். எல்லோரும் பழைய பம்பு செட்டு வைத்திருப்பீர்கள். அவை அடிக்கடி ரிப்பேர் ஆகும். அதனால் அவற்றை நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் அரசே இனி வாங்கித் தரும். இதனால் விவசாயிகள் மட்டுமல்ல, கோவையில் நலிந்திருக்கும் மோட்டார் பம்ப் தயாரிக்கும் தொழிலும் சிறக்கப் போகிறது. இந்தக் கூட்டத்திற்கு வருவதற்கு முன்பே, இந்திய பம்பு உற்பத்தியாளர் சங்கத்திலிருந்து எனக்கு நன்றி சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

**நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு 3 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

**பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு 5 ரூபாய் உயர்த்தி வழங்கப்படும்.**

**முதியோர் உதவித்தொகை இனி மாதம் 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

**மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித் தொகை 2 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

**மகளிர் சுய உதவிக்குழு சகோதரிகள் நிறைய பேர் இங்கு வந்திருப்பீர்கள். உங்களை எல்லாம் பிசினஸ்-வுமனாக முன்னேற்றும் வகையில் ஷ்யூரிட்டி எதுவும் இல்லாமலேயே, 5 இலட்சம் ரூபாய் வரை மானியத்துடன் வங்கிக் கடனுதவி வழங்கப்படும்.**

**உயர்கல்வி படிக்கும் 35 இலட்சம் மாணவர்களுக்கும் அடுத்த 5 ஆண்டுகளுக்குள் லேப்டாப் வழங்கப்படும்.**

**அனைத்துச் சட்டமன்றத் தொகுதிகளிலும் முதல்வர் படைப்பகங்கள் அமைக்கப்படும்.**

**மாவட்ட மற்றும் வட்ட அளவிலான அரசு மருத்துவமனைகளில் டயாலிசிஸ் சிகிச்சைக்கான கருவிகள் இரண்டு மடங்காக்கப்படும்.**

**ஆயிரம் குழந்தைகள்**
**காப்பகங்கள் உருவாக்கப்படும்!**

நான் முதல்வன் 2.0 திட்டத்தையும் அறிவித்திருக்கிறேன். இதன் மூலம், உயர்கல்வி முடித்த 5 இலட்சம் இளைஞர்களுக்கு, ஆயிரத்து 500 ரூபாய் மாத உதவித்தொகையும் கொடுத்து, வேலைவாய்ப்பிற்காக 6 மாதம் திறன் பயிற்சியும் கொடுக்கப் போகிறோம்.

அதேபோன்று, தொழிற்சாலைகள் அதிகமுள்ள நகரங்களில், பெண்கள் வேலைக்குச் செல்வதை எளிதாக்கும் வகையில், ஆயிரம் குழந்தைகள் காப்பகங்களை நாங்கள் உருவாக்கப் போகிறோம்.

தொழில் வளர்ச்சியில் சிறந்து விளங்கும் மேற்கு மாவட்டங்களுக்கான சிறப்பு வளர்ச்சி திட்டம் உருவாக்கப்படும். இதை மிகப்பெரிய புரட்சிகரத் திட்டமாக நான் பார்க்கிறேன். இது செயல்பாட்டு வரும்போது நீங்களும் அதை நன்றாக உணர்வீர்கள்.

அதேபோன்று, உங்க கனவ சொல்லுங்க திட்டம் தொடக்க விழா நிகழ்ச்சியில், ஒரு சகோதரி மேடை ஏறி வந்து என்னிடம் மிக உரிமையாக ஒரு கோரிக்கை வைத்தார்கள். "BC, MBC வகுப்புகளைச் சேர்ந்த மகளிருக்கு கடனுதவி வழங்கும் திட்டம் வேண்டும்" என்று கோரிக்கை வைத்தார்கள். அதற்காக, TABCEDCO அமைப்பு ஏற்கனவே செயல்பட்டு வந்தாலும், திராவிட மாடல் 2.0-வில் அதை இன்னும் உயர்த்தி, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோர், தொழில் தொடங்க கடன் பெறும் உச்ச வரம்பு 30 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும் என்று வாக்குறுதி தந்திருக்கிறேன். TAMCO மூலம் சிறுபான்மையினருக்கும் இதே போன்ற திட்டம் செயல்படுத்தப்படும்.

பெண்களின் பாதுகாப்பிற்காக அனைத்து நகரங்களுக்கும் 'பிங்க் பேட்ரால்' வாகனங்கள் விரிவுபடுத்தப்படும்.

**அடுத்த ஐந்து ஆண்டில்**
**10 லட்சம் வீடுகள் ஒதுக்கீடு!**

மகளிர் சுய உதவிக் குழு பெண்கள் ஷேர் ஆட்டோ வாங்க மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் பெற்றுத் தரப்படும்.

கலைஞர் கனவு இல்லம் உள்ளிட்ட திட்டங்கள் மூலமாக, வீடற்ற ஏழைகளுக்கு அடுத்த 5 ஆண்டுகளில் 10 இலட்சம் வீடுகள் கட்டித் தரப்படும்.

முக்கியமான அனைத்து அரசு சேவைகளையும் ஒரே செயலியில், அதாவது ஒரு 'Super App'-இல் பெற வழிவகை செய்யப்படும். இப்படி இன்னும் பல வாக்குறுதிகளை கொண்ட தேர்தல் அறிக்கையை நான் வெளியிட்டிருக்கிறேன்.

நான் ஏற்கெனவே சொன்னது போன்று இந்த அறிக்கைதான் 2026 தேர்தல் களத்தின் சூப்பர் ஸ்டார்! நாங்கள் சொன்னால் செய்வோம். செய்வதைத்தான் சொல்வோம். கலைஞரின் மகனான நான் சொன்ன வாக்குறுதிகளை மறக்கவும் மாட்டேன், மறுக்கவும் மாட்டேன். நாங்கள் ஒரு பிராமிஸ் பண்ணால், கண்டிப்பாக அதை டெலிவர் செய்திடுவோம்!

கோவை மக்களான நீங்கள் இந்த முறை பத்துக்குப் பத்து வெற்றியை தி.மு.க.வுக்கும் - மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளுக்கும் வழங்க வேண்டும்! நீங்கள் வழங்கும் வாக்கு என்பது, ஒரு கூட்டணிக்காக வழங்கும் வாக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக வழங்கும் வாக்கு!

பொருளாதார வளர்ச்சியில் நம்பர் ஒன்! ஆடைகள், காலணிகள், மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் நம்பர் ஒன்! இப்படி இந்திய அளவில் சாதித்துவிட்டு நாங்கள் வாக்கு கேட்க வந்திருக்கிறோம்!

ஆனால், கலவரம் செய்தாலே வென்றுவிடலாம் என்று நினைக்கும் கட்சிக்கு தமிழ்நாடு தக்க பதிலடியை தந்தாக வேண்டும்! தருவீர்கள்தானே? உறுதியாக? நிச்சயமாக? சத்தியமாக? நன்றி!

**தாய்த் தமிழ்நாட்டைக் காக்க**
**கோவை மக்கள் தயாராக வேண்டும்!**

மீண்டும் சொல்கிறேன்... தமிழ்நாடு அணியா? டெல்லி அணியா? என்ற இந்த ஜனநாயகப் போரில், அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு, நம்முடைய தாய்த் தமிழ்நாட்டைக் காக்க, கோவையில் உள்ள எல்லோரும் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குk கூட்டணியைத்தான் ஆதரிக்க வேண்டும்!

அதற்கு, கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதியில் வெற்றி வேட்பாளர் சகோதரர் செந்தில்பாலாஜிக்கும், கோவை வடக்கு சட்டமன்றத் தொகுதியில் வெற்றி வேட்பாளர் செந்தமிழ்ச் செல்வனுக்கும், சூலூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் தளபதி முருகேசனுக்கும், கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதியில் வெற்றி வேட்பாளர் சபரி கார்த்திகேயனுக்கும், பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதியில் கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சியைச் சேர்ந்த வெற்றி வேட்பாளர் நித்தியானந்தம் அவர்களுக்கும், வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் வெற்றி வேட்பாளர் சுதாகருக்கும், தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதியில் வெற்றி வேட்பாளர் என்.ஆர். கார்த்திகேயனுக்கும், மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதியில் வெற்றி வேட்பாளர் கவிதா கல்யாணசுந்தரம் உள்ளிட்ட 8 வேட்பாளர்களுக்கும், உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதியிலும், கவுண்டம்பாளையம் சட்டமன்றத் தொகுதியிலும் காங்கிரஸ் கட்சி சார்பில் அறிவிக்க இருக்கும் வேட்பாளர்களுக்கு கை சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும்!

**தமிழ்நாடு வளம்பெற**
**கழக ஆட்சி தொடர வேண்டும்!**

அன்பிற்கும், பண்பிற்கும், பாசத்திற்கும், உழைப்பிற்கும், புதுமைக்கும் புகழ்பெற்ற கோவை மக்கள் நீங்கள். உங்களின் பேராதரவுடன் திராவிட மாடல் ஆட்சிதான் தொடர வேண்டும்! கோவையே தயாரா? கோவை மென்மேலும் வளர நீங்கள் துணை நிற்க வேண்டும். தமிழ்நாடும் மென்மேலும் வளரும்! அமைய இருக்கும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில் எங்கள் சாதனைகளை நாங்களே முறியடிக்கும் வகையிலான ஆட்சியை நாங்கள் நடத்தப் போகிறோம். நாடு வளம் பெற, இந்த நல்லாட்சி தொடர்ந்திட ஆதரிப்பீர் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை! வெல்வோம் ஒன்றாக! வெல்வோம் ஒன்றாக! வெல்வோம் ஒன்றாக!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.




மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக பெ.கீதா ஜீவன் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து செயல்வீரர்கள் கூட்டம் தூத்துக்குடியில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, காங்கிரஸ் கமிட்டி குழு தலைவர் ஏ.பி.சி.வி. சண்முகம், மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், மாவட்ட துணை செயலாளர் ராஜ் மோகன் செல்வின், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான
மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

**கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்**
**பொன்.முத்துராமலிங்கம் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!**



**தலைமைக் கழக அறிவிப்பு!**

| தேதி | மாவட்டம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 6.4.2026 | திண்டுக்கல் கிழக்கு | நிலக்கோட்டை |
| 7.4.2026 | திண்டுக்கல் மேற்கு | ஒட்டன்சத்திரம் |
| 8.4.2026 | திண்டுக்கல் மேற்கு | நத்தம் |
| 11.4.2026 | புதுக்கோட்டை வடக்கு | புதுக்கோட்டை |
| 12.4.2026 | புதுக்கோட்டை தெற்கு | ஆலங்குடி |

**"அண்ணா அறிவாலயம்"** **தலைமைக் கழகம்**
சென்னை- 600 018. தி.மு.க.
நாள்: 02.04.2026.

---

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான
மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

**துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் ப. செல்வராஜ்**
**தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!**



தலைமைக் கழக அறிவிப்பு!

| தேதி | மாவட்டம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 06-04-2026 | நாமக்கல் கிழக்கு | ராசிபுரம் |
| 07-04-2026 | திருப்பூர் கிழக்கு | தாராபுரம் |
| 08–4–2026 | ஈரோடு மத்திய | பெருந்துறை |
| 09–04–2026 | ஈரோடு வடக்கு | அந்தியூர் |
| 11–04–2026 | நீலகிரி | கூடலூர் |
| 12-04-2026 | நீலகிரி | குன்னூர் |
| 13-04-2026 | கோவை வடக்கு | தொண்டா முத்தூர் |
| 14-04-2026 | திருப்பூர் மத்திய | திருப்பூர் - தெற்கு |
| 15-04-2026 | கோவை தெற்கு | பொள்ளாச்சி |
| 16-04-2026 | திருப்பூர் தெற்கு | உடுமலைப் பேட்டை |
| 17-04-2026 | திருப்பூர் தெற்கு | மடத்துக்குளம் |
| 18-04-2026 | திருப்பூர் வடக்கு | அவிநாசி |

**"அண்ணா அறிவாலயம்"** **தலைமைக் கழகம்**
சென்னை- 600 018. தி.மு.க.
நாள்: 02.04.2026.

---

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான
மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

**கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி**
**தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!**



தலைமைக் கழக அறிவிப்பு!

| தேதி | மாவட்டம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 06-04-2026 | சென்னை தெற்கு | சைதாப்பேட்டை |
| 07-04-2026 | சென்னை தெற்கு | சோழிங்க நல்லூர் |
| 08–4–2026 | காஞ்சிபுரம் வடக்கு | ஆலந்தூர் |
| 10–04–2026 | காஞ்சிபுரம் தெற்கு | மதுராந்தகம் |
| 12-04-2026 | காஞ்சிபுரம் தெற்கு | உத்திரமேரூர் |
| 13-04-2026 | காஞ்சிபுரம் தெற்கு | காஞ்சிபுரம் |
| 14-04-2026 | சென்னை மேற்கு | சேப்பாக்கம் திருவல்லிக்கேணி |

**"அண்ணா அறிவாலயம்"** **தலைமைக் கழகம்**
சென்னை- 600 018. தி.மு.க.
நாள்: 02.04.2026.

---

சட்டப்பேரவைப் பொதுத்தேர்தல் - 2026 தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற
முற்போக்குக் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து

**கொள்கைப் பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி**
**தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம்!**



**தலைமைக் கழக அறிவிப்பு!**

| தேதி | மாவட்டம் | சட்டமன்ற தொகுதி |
|---|---|---|
| 5.4.2026 | சென்னை கிழக்கு | அம்பத்தூர் |
| 6.4.2026 | சென்னை வடகிழக்கு | மாதவரம் |
| 7.4.2026 | திருப்பத்தூர் | ஜோலார்பேட்டை |
| 8.4.2026 | விழுப்புரம் மத்திய | வானூர் |
| 9.4.2026 | விழுப்புரம் தெற்கு | திருக்கோயிலூர் |
| 10.4.2026 | சேலம் கிழக்கு | கெங்கவல்லி |
| 11.4.2026 | சேலம் மேற்கு | எடப்பாடி |
| 12.4.2026 | சேலம் மேற்கு | மேட்டூர் |
| 13.4.2026 | நாமக்கல் கிழக்கு | சேந்தமங்கலம் |
| 14.4.2026 | நாமக்கல் மேற்கு | பரமத்தி வேலூர் |
| 15.4.2026 | நாமக்கல் மேற்கு | குமாரபாளையம் |
| 16.4.2026 | ஈரோடு வடக்கு | கோபிசெட்டிபாளையம் |
| 18.4.2026 | திருநெல்வேலி மேற்கு | ஆலங்குளம் |
| 19.4.2026 | திருச்சிராப்பள்ளி தெற்கு | திருச்சிராப்பள்ளி கிழக்கு |
| 20.4.2026 | புதுக்கோட்டை வடக்கு | விராலிமலை |

**"அண்ணா அறிவாலயம்"** **தலைமைக் கழகம்**
சென்னை- 600 018. தி.மு.க.
நாள்: 02.04.2026.